**கவனிக்க.**- *22.03.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1804 - 2013 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.03.28

*1804 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 433 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- (i) லக்ஷ்மன் வசந்த பெரேரா சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) குளோபல் ஹியுமெனிடேரியன் பவுண்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) ஐக்கிய முஸ்லிம் உம்மா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, பங்குனி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | மாவனல்ல | மாவனல்ல வைத்தியசாலைப் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கேகாலை |

3-1105

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, வைகாசி மாதம் 03 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, பங்குனி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பூஜாபிட்டி | பல்லோகம்பத வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஹரிஸ்பத்துவ பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி |

3-1106

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்

(சமூக சேவைகள் அமைச்சு)

பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

**பதவி**.- பணிப்பாளர் (நிர்வாகமும் நிதியும்)

(i) **வயதெல்லை**.- 25 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நிர்வாகம் அல்லது முகாமை பற்றிய முதலாம் பட்டத்துடன் நிர்வாகம் அல்லது முகாமை பற்றிய பட்டநிலை பின் படிப்புப் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க சேவையில், நியதிச் சட்ட சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் நிர்வாகம் மற்றும் நிதிசார் பணிகள் தொடர்பாக குறைந்தபட்சம் 15 வருடங்கள் சேவையாற்றி முகாமையாளர் மட்டத்திலான அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எச்எம் 1-3-2006 ரூபா 41,745-15 x 1,100 - ரூபா 58,245 (மாதம்)

2. **பதவி**.- பணிப்பாளர் (பயிற்சி)

(i) **வயதெல்லை**.- 25 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் முதலாம் பட்டத்துடன், சமூக விஞ்ஞான பாடங்களில் பட்டநிலை பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க சேவையில், அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சமூகப்பணி பயிற்சி முகாமைத்துவப் பிரிவுகளில் குறைந்தபட்சம் 15 வருடகாலம் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எச்எம் 1-3-2006
ரூபா 41,745-15 X 1,100 - ரூபா 58,245 (மாதம்)

3. **பதவி**.- பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி, கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீடு)

(i) **வயதெல்லை**.- 25 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் முதலாம் பட்டத்துடன், சமூக விஞ்ஞான பாடங்களில் ஆராய்ச்சியுடனான பட்டநிலை பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க சேவையில், அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் சமூகப்பணி ஆராய்ச்சி முகாமைத்துவப் பிரிவுகளில் 15 வருடங்கள் சேவையாற்றி அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எச்எம் 1-3-2006
ரூபா 41,745-15 X 1,100 - ரூபா 58,245 (மாதம்)

4. **பதவி**.- பதிவாளர் II.

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட சாதாரண பட்டம்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க, அரசு சார்ந்த நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கை மற்றும் நிர்வாகப் பணிகள் பற்றி குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எம்எம் 1-1-2006
ரூபா 25,640-3 X 665 - 7 X 735 - 15 X 925 - 46,655 (மாதம்)

5. **பதவி**.- உதவி நூலகர் II

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் பட்டம்.

(ஆ) **அனுபவம்**.- அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் நூலகத்தில் நூலகராக குறைந்தது 3 வருடங்கள் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஜேஎம் 1-1-2006ஏ
ரூபா 20,525-10 X 365 - 18 X 550 - ரூபா 34,075 (மாதம்)

6. **பதவி**.- சிரேஷ்ட விரிவுரையாளர்

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் முதலாம் பட்டத்துடன், சமூகப்பணி (Social Work) பற்றிய கலாநிதி பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவன மொன்றில் சமூக வேலைக் கற்கை மற்றும் கற்பித்தல் பிரிவுகளில் 10 வருடங்களுக்கு குறையாது சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-2-2006ஏ
ரூபா 34,550-10 X 925 - ரூபா 43,880 (மாதம்)

7. **பதவி**.- சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர்

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூகவியல் பாடங்களில் முதலாம் பட்டத்துடன், சமூகவியல் பாடங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சமூக வேலைப் பயிற்சிப் பிரிவுகளில் 10 வருடங்களுக்கு குறையாது சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-2-2006ஏ
ரூபா 34,550-10 X 925 - ரூபா 43,880 (மாதம்)

8. **பதவி**.- சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞான பாடங்களில் முதலாம் பட்டத்துடன், சமூகவிஞ்ஞான பாடங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சமூக வேலை ஆராய்ச்சிப் பிரிவுகளில் 10 வருடங்களுக்கு குறையாது சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-2-2006ஏ
ரூபா 34,550-10 X 925 - ரூபா 43,880 (மாதம்)

9. **பதவி**.- விரிவுரையாளர் II

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர் கல்வி நிறுவனமொன்றில் இருந்து சமூகப்பணி (Social Work) பற்றிய முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்ந்த தர) சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞானப் பாடங்களில் பெறப்பட்ட முதலாம் பட்டத்துடன் சமூக வேலை (Social Work) பற்றிய பட்டநிலை பின் படிப்புப் பட்டமொன்றை பெற்றிருத்தல்

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-1-2006ஏ
ரூபா 24,725-5 X 550 - 5 X 645 - 15 X 770 - ரூபா 42,250 (மாதம்)

10. **பதவி**.- பயிற்சி உத்தியோகத்தர் II

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் இருந்து சமூகவிஞ்ஞானப் பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர்ந்த தர) சித்தியுடனான பட்டம் ;

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞானப் பாடங்களில் பெறப்பட்ட முதலாம் பட்டத்துடன் பட்டநிலை பின் படிப்புப் பட்டமும் ;

அத்துடன்

சமூக அபிவிருத்தி மற்றும் நலனோம்புகை பற்றிய அரசின் உயர்கல்வி/பயிற்சி நிறுவனம் ஒன்றில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், செயற்படுத்தல், பயிற்றுவித்தல் மற்றும் மதிப்பிடுதல் தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்குக் குறையாத கால அனுபவத்தையும் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-1-2006ஏ
ரூபா 24,725-5 X 550 - 5 X 645 - 15 X 770 - ரூபா 42,250 (மாதம்)

11. **பதவி**.- ஆராய்ச்சி உத்தியோகத்தர் II

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் இருந்து சமூகவிஞ்ஞானப் பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்ந்த தர) சித்தியுடன் ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரை உடனான பட்டம் ;

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞானப் பாடங்களில் பெறப்பட்ட முதலாம் பட்டத்துடன் பட்டநிலை பின் படிப்புப் பட்டம் ;

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன், அரசாங்க அல்லது நியதிச்சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஆராய்ச்சி உதவியாளரொருவராக ஆராய்ச்சிப் பணிகளில் 3 வருடகாலம் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- ஏஆர்-1-2006ஏ
ரூபா 24,725-5 x 550 - 5 x 645 - 15 x 770 - ரூபா 42,250 (மாதம்)

12. **பதவி**.- ஆராய்ச்சி உதவியாளர் II

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஆராய்ச்சிப் பாடங்கள் உள்ளடங்கிய சமூக விஞ்ஞான பாடங்களில் பட்டம் பெற்றிருத்தல் ;

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆராய்ச்சிப் பணிகள் பற்றி குறைந்தபட்சம் ஒரு வருடகால அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எம்ஏ-3-2006ஏ
ரூபா 15,600-10 x 215 - 4 x 240 - 15 x 320 - 7 x 360 - ரூபா 26,030 (மாதம்)

13. **பதவி**.- மொழிபெயர்ப்பாளர் III

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சிங்களம்/தமிழ் மொழி மூலம் பட்டமொன்றைப் பெற்றிருத்தலும், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி/ இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி பெயர்ப்பு பற்றிய நிபுணத்துவம் பெற்றிருத் தலும் ;

(ஆ) **அனுபவம்**.- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சிங்கள/தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவராக 2 வருட கால அனுபவம் பெற்றிருத்தலும்

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எம்ஏ-4-2006ஏ
ரூபா 18,230-10 x 365 - 15 x 450 - 5 x 550 - 31,380 (மாதம்)

13. **பதவி**.- செவிப்புல கட்புல தொழில்நுட்பவியலர் III

(i) **வயதெல்லை**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) **கல்வித் தகைமை**.- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம், கணிதம் அடங்கலாக மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஓர் அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் ;

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களில் எல்லாவற்றிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சிததிபெற்று மூன்றாம்நிலை கல்விப்பாட நெறியினை கற்பதற்காக வேண்டிய திறமை மட்டத்தை அடைந்திருத்தல்.

(ஆ) **தொழில்நுட்பத் திறன்கள்/தேர்ச்சிகள்**.- ஒவ்வொரு பதவியினது வேலைப்பளுவுக்கு உரியதாக மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்திறன் (என்வீகியூ) ஐந்து (05) மட்டத்திற்குக் குறையாத செவிப்புல, கட்புல தொழில்நுட்ப பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் ;

(iii) **சம்பள அளவுத்திட்டம்**.- எம்ஏ2-2-2006ஏ
ரூபா 14,610-10 x 145 - 7 x 170 - 4 x 290 - 20 x 345 - ரூபா 25,310 (மாதம்)

மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :

(1) பதவி நிரந்தரமானது ;

(2) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு உதவித் தொகை செலுத்த வேண்டும் ;

(3) மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இந்த வெற்றிடங்கள் நாவலை, இராஜகிரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் காணப்படுவதுடன் வேறெந்த கிளையும் இந்நிறுவனத்திற்கு இல்லை. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள தலைமை அலுவலகத்தில் மட்டும் பணியாற்ற வேண்டும்.)

**சேவை நிபந்தனைகள்**.- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரியில் 2013.04.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல்

மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்.
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரி.
2013.03.15.

3-1180

---

## சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு

### நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் உதவி இல்லப் பராமரிப்பாளர் (வோர்டன்) பதவிக்கு திறந்த ஆட்சேர்ப்புச் செய்தல்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள உதவி வோர்டன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுவான தகைமைகள்** :

(அ) விண்ணப்பதாரர் ஒரு பெண்ணாகவும், இலங்கைப் பிரசையாகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் (01) (பொதுவான பாடம் தவிர) சித்தியடைந் திருத்தல்.

3. **தொழில்சார் தகைமைகள்**.- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் அல்லது அரச அங்கீகாரம் பெற்றுள்ளதொரு நிறுவனத்திலிருந்து சிறுவர் பாதுகாப்பு அல்லது உளவள துணை தொடர்பான பாடநெறியொன்றை கற்றிருத்தல் (03 மாதங்களுக்குக் குறையாதது).

4. **அனுபவம்**.- மூன்று மாதங்களுக்குக் குறையாத சிறுவர், இளைஞர் சமூக நலன்புரி நடவடிக்கைகளில் செயன்முறை ரீதியான பயிற்சியைப் பெற்றுள்ளமைக்கான சான்றிதழ் அல்லது கடிதங்கள் (அரச நிறுவனம் அல்லது அரச அங்கீகாரம் பெற்றுள்ளதொரு நிறுவனத்திடமிருந்து)

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவைகளில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

6. **சம்பள அளவுத்திட்டம்**.- சம்பளத் தொகுதி- எம்என்-1-2006ஏ (பொது நி. சு. இல. 06/2006 (iv) இற்கமைய)

சம்பள அளவுத் திட்டம்.- ரூ. 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூ. 22,040.

7. **சேவை நிபந்தனைகள்**.- (அ) இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய உரித்துடையது. தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் விதவை, தபுதாரர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அ. சே. ஆ. குழுவின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட் டுள்ள நடைமுறை ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும். மேலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள கட்டளைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமைகளை மேற்கொள்வதற்கு உகந்த உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்காக நடாத்தப்படுகின்ற அரசாங்க மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) நியமனத் திகதி முதல் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுகின்றார்கள்.

(உ) பதவிக்கு நியமனம் பெற்று மூன்று வருட காலப்பகுதிக்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) அரச கரும மொழி அல்லாத மொழி ஊடகங்களின் மூலம் சேவையில் இணைந்துகொள்ளும் அலுவலர்கள் தகுதிகாண் காலப்பகுதிக்குள் அரச கரும மொழிக்கான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் பொ. நி. சு. இல. 07/2007 இற்கமைய சேவையில் இணைந்து 5 வருட காலப்பகுதிக்குள் II ஆம் மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் நிறுத்திவைக்கப்படும்.

8. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை**.- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் (40%) சித்திப் புள்ளியைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரர்களில் உச்ச புள்ளியைப் பெற்றுக்கொள்கின்றவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

விதிவிலக்கு.- (அ) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகைமை களுக்கு அமைய கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்குகின்ற தலைப்புகளுக்கு உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள் கின்றவர்களிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கையில் ஐந்து மடங்கு

எண்ணிக்கையானோர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள்.

மொத்த வெற்றிட எண்ணிக்கையையும் நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு உண்டு.

**கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப் படுகின்ற தலைப்புகள் :**

(i) மேலதிக தகைமைகள் - உச்ச புள்ளிகள் 30

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் அல்லது அரச அங்கீகாரம் பெற்றுள்ள வேறொரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட (ஒரு வருட) சமூக சேவைகள் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் - (10 புள்ளிகள் வீதம்)

(ii) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கற்றுள்ள பாடநெறிகள் (ஆறு மாதங்களுக்கு (06) மேற்பட்டவை) - ஒவ்வொரு பாடநெறிக்கும் 05 புள்ளிகள் வீதம் - உச்ச புள்ளிகள் 25

(iii) பயிற்சிச் சான்றிதழ்கள் - உச்ச புள்ளிகள் 20

சிறுவர், இளைஞர் சமூக நலன்புரி தொடர்பானது (03 மாதங் களுக்கு மேற்பட்ட ஒரு மாதத்திற்கு 02 புள்ளிகள் வீதம்)

(iv) கணனிப் பயிற்சிச் சான்றிதழ்கள் (6 மாதங்களுக்கு மேற்பட்டவை) - உச்ச புள்ளிகள் 12

(v) ஆங்கில மொழி அறிவு பற்றிய சான்றிதழ்கள் - உச்ச புள்ளிகள் 08

க. பொ. த. (சா. த.) - 05 புள்ளிகள்
பயிற்சிப் பாடநெறிகள் (06 மாதங்களுக்கு மேற்பட்டவை) - 03 புள்ளிகள்
(அரச அங்கீகாரம் பெற்றுள்ள பயிற்சி நிறுவனமாதல் வேண்டும்.)

(vi) தலைமைத்துவம், கருத்துக்கள், ஆளுமை மற்றும் தொடர் பாடல் திறமைகளுக்கு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் வழங்கப்படுதல் - உச்ச புள்ளிகள் 05

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயார் செய்துகொள்ளும் விண்ணப்பப்படிவங்களை 2013.04.19 ஆந் திகதிக்கு முன்னர் ‘‘ஆணையாளர், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இலக்கம் 69, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்தை, கொஹுவல, நுகேகொடை’’ எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிசெய்வதற்காக தாமே சான்றுப்படுத்திய பிரதிகளையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘உதவி வோர்டன் பதவிக்கான விண்ணப்பப்படிவம் - 2013’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) சகல வகையிலும் பூர்த்திசெய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாதுள்ள மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன், விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை அல்லது நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

10. **பொய்யான மற்றும் தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்**.- யாராயினுமொரு அபேட்சகருக்கு தகைமை இல்லை என்பது நியமனம் பெறுவதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் தெரியவரின் அபேட்சகர் வாய்ப்பை அவர் இழக்கின்றார். நியமனம் பெற்ற பின்னர் அதுபற்றி அல்லது வேண்டுமென்றே பொய்த் தகவல்களைச் சமர்ப்பித்திருப்பதாக அல்லது உண்மையான தகவல்கள் மறைக்கப் பட்டிருப்பதாக தெரியவருமாயின் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தொடர்பான விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலின் மூலம் வெளிப்படுத்தப்படாதுள்ள வேறு விடயங்கள் தொடர்பில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரின் தீர்ப்பு இறுதியானதாகும்.

எம். யமுனா பெரேரா,
ஆணையாளர்,
நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,
இலக்கம் 69, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்தை,
கொஹுவல,
நுகேகொடை,
02.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் உதவி வோர்டன் பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. (அ) விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர்
(சிங்களம்/தமிழில்) :----.
(ஆங்கில மொழியில்) :----.

(ஆ) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :
----.
(சிங்களம்/தமிழில்) :----.

(ஆங்கில மொழியில்) :----.

2. நிரந்தர முகவரி :----.

3. தற்போது வசிக்கும் முகவரி :----.

4. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பால் :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.

7. இனம் :----.

8. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது :----.

9. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை - ஆண்டு :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை - ஆண்டு :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. துறைசார் தொழில் தகைமைகள் :----.

11. சேவைசார் அனுபவம் :----.

12. பிற கல்வித் தகைமைகள் :

(i) சமூக சேவைகள் பற்றிய டிப்ளோமா பாடநெறி ;
(ii) சிறுவர் பாதுகாப்பு பற்றிய பாடநெறி ;
(iii) சிறுவர், இளைஞர், சமூக நலன்புரி விடயம் தொடர்பான பயிற்சிச் சான்றிதழ்கள் ;
(iv) கணனிப் பயிற்சி ;
(iv) ஆங்கில மொழித் தேர்ச்சி

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

.................................................... ஆகிய நான் இங்கு குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து சேவை நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையில் மாற்றீடாக வினைத்திறனின்மை காரணமாக சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி நீங்கிய ஒருவராக கருதப்படவில்லை என்றும் உறுதி செய்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் உண்மைக்கு மாறானவையென அல்லது தவறானவையென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவரும் பட்சத்தில் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை தெரியவரும் பட்சத்தில் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது தொழிலில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ........................................................................
தற்போது இந்த அமைச்சில், திணைக்களத்தில் ................................. ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அடிப்படையில் சேவையாற்றி வருவதாகவும், மேற்படி பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாதென்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

3-1198

---

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

நிர்வாக சேவையின் வகுப்பு I இலுள்ள உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்குப் பதவியுயர்த்துதல்

2013.02.08 ஆந் திகதிய 1797 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்குப் பதவியுயர்த்துதல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கீழ்வரும் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.

"தகைமைகளைப் பூர்த்திசெய்யும் திகதிகள் 2011.07.01 மற்றும் 2012.01.01 ஆக திருத்துவதற்கு".

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

3-1062

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.